## 29.16 மக்கள் நலப்பணியாளர்கள் திட்டம் – கணிப்பாய்வு மற்றும் ஊதியம் பெற்று வழங்கும் அலுவலர் நியமனம்

ஊரக வளர்ச்சி (சி3) துறை

அரசாணை (நிலை) எண்.277 நாள் : 10.09.1997

படிக்க :

1. அரசாணை நிலை எண்.50, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 24.02.1997
2. அரசுக் கடிதம் எண்.10030/சிஎஸ்.எஸ்1/ஊ.வ., நாள் 22.08.1997.

**ஆணை**

அரசு மக்கள் நலப்பணியாளர்கள் திட்டத்தின் செயற்பாட்டிற்காக ஊரக வளர்ச்சி இயக்குநரை கணிப்பாய்வு அதிகாரியாக நியமனம் செய்கிறது.

2. மக்கள் நலப்பணியாளர் திட்டத்தின் எந்த அம்சத்தைப் பற்றியும் மாவட்ட ஆட்சியர்கள் ஊரக வளர்ச்சி இயக்குநரின் கவனத்திற்கு கொண்டு செல்லவும் அரசுக்கு (ஊ.வதுறை) நகலிடவும், அதை அரசு பரிசீலிக்க அரசுக்கு உரிய முன்மொழிவாக ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசுக்கு அனுப்பவும், கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

3. சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அதிகாரி தமது எல்லையில் உள்ள ஊராட்சியில் பணியாற்றும் மக்கள் நலப் பணியாளர்களுக்கு ஊதியம் பெற்று வழங்கும் அதிகாரியாவார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ்.நாராயண்**
அரசு செயலாளர்